# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அசல் வழக்கு எண். 5/2023

நாள் : 12.03.2026

பி.வா.சா. : 1

பெயர் : துரைசாமி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாசாஆ 1 ஆவணத்தின் படி நிர்ணயம் செய்யப்பட்ட வட்டி விகிதம் மாதம் ஒன்றற்கு நூற்றுக்கு ரூபாய் இரண்டு என்றால் சரிதான். என் எதிர்வழக்குரைப்படி மாதம் ஒன்றிற்கு நூற்று ஒரு ரூபாய் என்று சொல்லியுள்ளதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் வழக்கறிஞரைதான் கேட்கவேண்டும். மாதாந்திர வட்டியை செலுத்தியதற்கான ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் ரொக்கமாக கொடுத்துள்ளேன் ஆதாரம் எதுவும் இல்லை. எதிர்வழக்குரையில் சொன்னபடி நூற்றுக்கு ரூபாய் ஒன்று என நிர்ணயம் செய்யப்பட்டது என்று வழக்கிற்காக பொய்யா சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாதந்திர வட்டியை எதிர்வழக்குரையில் சொன்னபடி வாதிக்கு தரவில்லை என்பதால் தான் என்வசம் ஆதாரம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கொடுத்த அறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு கொடுத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பதலறிவிப்பு என்பது நான் என் வழக்கறிஞர் மூலம் கொடுத்தது தான் அது **வாசாஆ 5** ஆகும். அந்த பதிலறிவிப்பில் நூற்றுக்கு ரூபாய் ஒன்று வட்டி கொடுத்துள்ளதாகவும் வட்டி தொகையானது முழுமையாக செலுத்தப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு சொல்லப்படவில்லை என்றாலும் தவறான சங்கதியை முன்வைத்து

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.  வாதி கேட்டுக்கொண்ட பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.